1978 செப்டம்பர் 2]

அவ்வாறு நல்ல நிலையில் நிர்வாகம் இருந்தால் மேலும் தொடர்ந்து அரசே நிர்வாகத்தை நடத்த முன்வருமா? உதாரணமாக சிவகங்கை கல்லூரி.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அந்தக் கல்லூரி நல்ல முறையில் நடைபெறத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

திரு. கோ. இளங்கோவன்: தனியார் கல்லூரிகளில் ஆசிரியர்களுக்கு வழகப்படும் சம்பளத்தில் அரசு எவ்வளவு மானியமாக வழங்குகிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கலைக் கல்லூரிகளைப் பொறுத்தமட்டில் ஏறக்குறைய முழுமையான அளவுக்குத் தருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டத்திற்கு முதன்மைக் கல்வி அதிகாரி அலுவலகம்

*வினா எண் 46—**திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன், திரு. கா அப்புனு கவுண்டர், திரு. எம். அண்ணாமலை, டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தருமபுரி மாவட்டத்திற்கென இன்னும் தனியாக முதன்மைக் கல்வி அதிகாரி (C.E.O.) அலுவலகம் திறக்கப் படாமல் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) & (ஆ) ஆம். அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: இது பற்றி அரசு பரிசீலனையில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இந்த மாவட்டம் தொடங்கி பத்தாண்டுகளுக்கு மேல் ஆகிறது. எப்போது தனியாக முதன்மைக் கல்வி அதிகாரி அலுவலகம் துவங்கப்படும்?

[1978 செப்டம்பர் 2

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தர்மபுரி மாவட்டம் மட்டுமல்ல. தர்மபுரி, நீலகிரி, புதுக்கோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் தனி முதன்மைக் கல்வி அதிகாரி இல்லாமல் இருக்கிறது. அது பற்றிப் பரிசீலிக்கப் பட்டு வருகிறது. பரிசிலனை முடிந்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கா. அப்புனு கவுண்டர்: தர்மபுரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்று அறிவிக்கப்பட்டு சலுகைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. நிர்வாகச் சீர்கேடுகளைக் களைய வேண்டுமென்ற வகையில் அந்த மாவட்டம் ஆரம்பித்து 13 ஆண்டுகள் ஆகியும் தனியாக முதன்மைக் கல்வி அதிகாரி அலுவலகம் அமைக்கப்பட வில்லை. அதனை விரைவில் அமைக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுதான் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

திரு. எம். அண்ணாமலை: தர்மபுரி மாவட்டத்தின் முதன்மைக் கல்வி அலுவலகம் சேலத்தில் இணைந்திருப்பதால் அதிகப்படியான போக்குவரத்துச் சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதோடு இந்தச் சிரமங்களைக் குறித்து மாவட்ட வளர்ச்சி மன்றம் ஒரு முடிவு செய்து அறிவித்தது அரசுக்கு வந்துள்ளதா? இதன்பேரில் இனியாவது துரிதமாக நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசே இதுபோன்ற மாவட்டங்களுக்கு தனி முதன்மைக் கல்வி அதிகாரி போட வேண்டுமென்று முடிவெடுத்திருக்கிறது. அதிலே தர்மபுரி மட்டுமல்ல, நீலகிரி, புதுக்கோட்டை மாவட்டங்களும் அடங்கும். அது பரிசீலனை செய்யப்பட்டு, பரிசீலனை முடிந்த பிறகு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் கே. சமரசம்: நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் இது கேட்கப்பட்டு அரசியல் காரணங்களால் வேறு மாவட்டத்திற்கு அளிக்கப்பட்டது என்பது உண்மையா? விரைவில் இந்த ஆண்டு இதனை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதுபோன்ற காரியங்களில் இந்த அரசு அரசியல் காரணங்களை வைத்துக் கொண்டு செயல்படாது என்ற உறுதியை மட்டும் இப்போது தருகிறேன்.